**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் HD தொழில் நுட்பத்தில் போட்டோ பிடித்து நவீன தொழில்நுட்பத்தில் செய்து பெற்றுக்கொள்வதற்கும் –

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internet மூலம் உங்கள் நிகழ்வுகளை அதி உயர்தரத்தில் நேரடியாக Online Videoவில் பார்த்து மகிழ்ந்திடவும் –

**இன்றே நாடுங்கள்**

வானவில் கலையகம்
330, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
www.vanavilstudio.com
T.P.: 021 222 9466, 0772487550



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 64 வியாழக்கிழமை ஜூலை 13 2017 ethirolimedia@gmail.com 02[illegible]3




# அரைகுறைத் தீர்வை திணிக்க முடியாது



“எம்மைச் சிறையில் அடைப்பதன் ஊடாக அரை குறை அரசியல் தீர்வைத் திணிக்க முடியாது. அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டங்களை முன்னெடுப்பார்கள்” என வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் கடந்த மே மாதம் யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூறிய விடயம் தொடர்பில் குற்றபுலனாய்வு துறையால் யாழ். ஊடகவியலாளர் ஒருவருக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. 10 ஆம் திகதி வருமாறு கோரப்பட்டுள்ளது. வாக்குமூலத்தையும் வழங்குமாறு கேட்டுள்ளனர். ஊடகவியலாளர் சந்திப்பில் கூறிய விடயம் தொடர்பில் வீடியோப் பதிவுகளை கொண்டு வருமாறும் கோரப்பட்டுள்ளது. மே 8 சொன்னதை ஜூலை 8 கேட்க

06

## சந்திக்க மறுத்தார் ஐ.நா.விஷேட பிரதிநிதி

வவுனியாவில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களை, மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விஷேட பிரதிநிதி பென் எமர்ஷன் தலைமையிலான குழு சந்திக்க மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பிலான

06

# வடக்கே வரும் மகாநாயக்கர்கள்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கு, அஸ்கிரி மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்கள் தீர்மானித்துள்ளனர். இதற்காக, பௌத்த பிக்குமார்கள் அடங்கிய குழுவொன்று, குறித்த மாகாணங்களுக்கான விஜயத்தை மேற்கொள்ள எதிர்ப்பார்த்திருப்பதாக, அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சாஸ்த்ரபதி பேராசிரியர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார். இந்த பிக்குமார்களின் விஜயத்தின் போது, காடழிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்ட நிலையிலேயே, இந்த விஜயத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும், தம்மானந்த தேரர் மேலும் கூறியுள்ளார். (உ)

## போதையால் மோதல் 41 மாணவர்கள் கைது



பொலன்னறுவை, மெதிரிகிரிய கல்வி வலயத்திலுள்ள பாடசாலையொன்றில், கல்வி பயிலும் மாணவர்களில் 41 பேர், கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்தனர். 10ஆம் மற்றும் 11ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களே, போதையில் தள்ளாடிய நிலையிலிருந்த போது நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில், ஏழு பேர் மாணவிகள் என்றும், 32 மாணவர்களின் கைகளில், கடுமையான வெட்டுக்காயங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார்தெரிவித்தனர். மாணவிகள் ஏழு பேரும், கடுமையான முறையில் எச்சரிக்கப்பட்டு, அவர்களின்பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனரென

06



# நல்லிணக்கம் ஆரம்பமாம்!

கூட்டான குற்றச் செயல்களைத் தடுக்க சார்க் நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்துக்கான அடிப்படைக் காரணங்களுக்கு தீர்வு வழங்குவதில் யுத்தத்தின் பின்னராக காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள சவாலான பணி பற்றி கொழும்பில் இன்று ஆரம்பமான செயலமர்வில் அவர் உரையாற்றினார். பாரம்பரிய முறைகளில் இருந்து விலகி சைபர் தாக்குதல் இணையத் தாக்குதல் போன்றவற்றின் ஊடாகவும் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக ரணில் சுட்டிக் காட்டினார். சார்க் அமைப்பின் 8 நாடுகளின் உட்துறை அமைச்சர்கள் இதில் பங்கேற்கிறார்கள். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகளை விடுவித்தல், காணாமல் போனவர்கள் தொடர்பான சட்டத்தின் மூலம் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காத வகையில் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் ஸ்தாபிக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (எ)

## சிறிதரன் மன்னிப்பு கோரவேண்டும்

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் கொடூர பிரதேசவாத சொற்பிரயோகங்களை வன்மையாக கண்டிப்பதோடு, அவர் நாட்டில் வாழ்கின்ற மலையக மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என வடக்கு - கிழக்கு வாழ் மலையக மக்கள் ஒன்றியம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது. நேற்று கிளிநொச்சிக்குப் பயணம் செய்த சம்பந்தனிடம் இம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த மகஜரில்

06







## புலிகளின் போர்ப்படகு திடீரென அகற்றம்!

புதுக்குடியிப்பு-புதுமாத்தளனில் படையினரால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் “இளவரசி” என்னும் போர்ப்படகு நேற்று திடீரென அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிப்போரில் படையினரால் கைப்பற்றப்பட்ட, விடுதலைப் புலிகளின் போர்த் தளபாடங்கள் சிலவற்றை

06

# ஒற்றுமையின் அவசியத்தை உணரும் தருணமிது



தமிழ்த் தலைமைகள் ஒற்றுமையின் அவசியத்தினை உணர்ந்து செயற்பட வேண்டிய தருணமிது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அண்மைக்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கையின் அரசியல் களத்தில் முக்கிய தருணமாக கருதப்பட்டுவருகின்றது. தேசிய இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்க கூடியவகையிலான அரசியல் அமைப்பொன்றினை உருவாக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து சர்வதேசத்துக்கு தமது பலத்தினை உறுதிப்பாட்டுடன் காட்டவேண்டிய தேவையுள்ளது. வட மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்களை அடிப்படையாக கொண்டு காலத்தின் தேவை மற்றும் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட வேண்டும். குறிப்பாக மாற்றுத்தலைமை என்ற எண்ணக்கருவை மறந்து செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மயானங்களை அகற்று!

## புத்தூரில் தொடர் போராட்டம்



மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றக் கோரி புத்தூர் மேற்கு மக்கள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து, கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறாக குடியிருப்புகளுக்கு நடுவே அமைந்திருக்கும் மயானங்களை அகற்றக் கோரியும் இந்தப் போராட்டம் புத்தூர் கலைமதி மக்கள் மண்டப முன்றலில் நேற்று புதன் கிழமை ஆரம்பமாகியுள்ளது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் அழைப்பில் நடைபெற்று வரும் இந்தத் தொடர் சத்தியாக்கிரகத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டுள்ளனர். (அ)

### மகஸின் சிறைக் கலவரம்

# குற்றப் பத்திரிகை கையளிப்பு

மகஸின் சிறைக் கலவரம் தொடர்பான குற்றப்பத்திரிகை ஐந்து வருடங்களின் பின்னராக 56 சந்தேக நபர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி கலவரம்செய்து சக கைதிகளுக்கும் சிறையதிகாரிகளுக்கும் காயங்களை விளைவித்த குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இதில் குற்றஞ்சாட்டப்பட்ட 56 சந்தேகநபர்களுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை குற்றப்பத்திரிகைகள்கையளிக்கப்பட்டன.

இந்நிலையில் சந்தேகநபர்களை தலா ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு இலட்ச ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறும் கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர் ஆர்.குருசிங்க உத்தரவிட்டதுடன் அடுத்த விசாரணையை செப்டெம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-212)

# வர்த்தக உடன்பாடு

இலங்கைக்கும் டியூனிசியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக விவகார அமைச்சர் ரிசாட் பதியூதின் ஊடகங்களுக்கு நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் டியூனிசியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தற்போது ஸ்தம்பித நிலையில் காணப்படுகின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை காத்திரமான அடிப்படையில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேயிலையை டியூனிசியாவுக்கு ஏற்றுமதி செய்யவும், டியூனிசியாவின் இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் ஆடைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ)

### சர்வதேசச் சட்டங்கள்:

# படையினருக்கு கருத்தரங்கு

சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் முறையான சவால்கள் 2017 எனும் தொனிப்பொருளில் படைப் பிரிவுகளின் தளபதிகள் மற்றும் கட்டளை அதிகாரிகளுக்கான இரண்டு நாட்களைக் கொண்ட விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் அவற்றின் நடைமுறை அம்சங்கள் தொடர்பாக அதிகாரிகாரிகளுக்கு விரிவான விளக்கமளிக்கும் வகையில் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகளான சந்தன ஜெயவர்த்தன மற்றும் கொன்ஸ்டான்டிநோஸ் மோர்டோ பௌலஸ் ஆகியோர் கலந்துகொண்டு குறித்த விடயம் தொடர்பாக படையினருக்கு விளக்கமளித்துள்ளனர்.(உ)

# கடற்படைக்கு எதிராக ஐ.நாவில் முறைப்பாடு

இலங்கையின் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவது தொடர்பில் இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையகத்தினால் தமக்கு நீதி கிடைக்காதுபோனால் சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்போவதாக தமிழக தேசிய கடற்றொழிலாளர் பேரவை எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் குறிப்பிட்ட பேரவையின் தலைவர் எம். இளங்கோ, இலங்கையின் கடற்படையினரால் இதுவரை 500 தமிழக மீனவர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர் எவ்வித குற்றங்களும் செய்யாத நிலையில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மையிலும், ராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள தங்கச்சிமடத்தை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். எனினும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தமிழக பொலிஸார் இந்த விடயத்தில் நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

எனவே இந்த விடயத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிடம் முறையிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (உ)

# தேசிய தமிழ் மொழித் தினம் இம்முறை யாழ்ப்பாணத்தில்

தேசிய தமிழ் மொழித் தினம் கல்வி அமைச்சினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகிறது. அதன் இவ்வருட நிகழ்வுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் அண்மையில் நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன்,

“எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் 375 பேருக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

மாணவர்களின் கலை நிகழ்வுகள், தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலாசார ஊர்வலம், இந்தியக் கலைஞர்களின் மேடை நிகழ்வுகள், இலக்கிய சொற்பொழிவுகள் போன்றன இடம்பெறவுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# டெங்கு ஒழிப்பில் பொலிஸார்

வவுனியா நகர்ப் பகுதியில் டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜமுனி தலைமையிலான பொலிஸ் குழுவினர் நகரின் பிரதான பகுதிகளில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். இதன் போது கழிவுநீர் செல்லும் வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்பட்டன. அத்துடன் நகரில் குப்பைகள் தேக்கமடைந்திருந்த பகுதிகளும் சிரமதானம் செய்யப்பட்டன. (உ)



# செம்பரம்பாக்கம் ஏரி நீர்மட்டம் திடீர் உயர்வு



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த 2 நாட்களாக இரவு நேரங்களில் கடும் மழை பெய்து வருகின்றது.
இதன் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் உயர்ந்து உள்ளது. மழைக்கு முன்பு ஏரியின் நீர் மட்டம் 2.28 அடியாகவும், நீர் இருப்பு 47 மில்லியன் கன அடியாகவும் இருந்தது. ஆனால் நேற்று முன்தினம் இரவு ஒரே நாள் பெய்த பலத்த மழையால் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால் தற்போது ஏரியின் நீர் மட்டம் 2.85 அடியாகவும், நீர் இருப்பு 78 மில்லியன் கன அடியாகவும் உயர்ந்து உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து கடந்த சில தினங்களாக தண்ணீர் எடுப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. மேலும் மழை தொடரும் பட்சத்தில் ஏரியில் நீர் மட்டம் வேகமாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. கடந்த வருடம் செம்பரம்பாக்கம் ஏரி உடைத்ததால், பெரும் அழிவைச் சென்னை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# விமானத்தில் வந்த கறவை மாடுகள்




சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் கட்டாரைத் தனிமைப் படுத்தியுள்ள நிலையில், கட்டாரில் பால் விநியோகத்தை அதிகரிக்க,கறவை மாடுகள் விமானத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன.
இறக்குமதி செய்யப்பட உள்ள 4000 மாடுகளில், முதல்கட்டமாக 165 ஹால்ஸ்டீன் ரக பால் மாடுகள் ஜெர்மனியில் இருந்து கட்டார் வந்து சேர்ந்துள்ளன.
கட்டாரில் வாழும் 2.7 மில்லியன் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய அந்நாடு இறக்குமதிப் பொருட்களையே நம்பியிருந்தது. ஆனால் பிற நாடுகள் விதித்திருக்கும் வான், கடல் மற்றும் நில வழித் தடையின் காரணமாக இறக்குமதிப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை கட்டாரிலேயே உற்பத்தி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒருகட்டமாக கட்டாரில் பாற்பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இவை செயற்படத் தொடங்கியதும், கட்டாரின் பால் தேவையின் பெரும்பகுதியை பூர்த்தி செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. இதற்காக வெளிநாடுகளில் இருந்து நல்லினப் பசுக்களை கட்டார் அரசு விமானம் மூலம் தருவித்து வருகின்றது. (இ)

# மொசூல் நகரமெங்கும் மழலைகளின் அழுகை



ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து, ஈராக்கின் மொசூல் நகரை ஈராக் இராணுவம் கைப்பற்றிய பின்னர், அந்த நகரில் 3000 பொதுமக்கள் சிக்கியிருப்பதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிக்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் மற்றும் முதியவர்கள். அவர்கள் தம் குடும்பங்களைப் பிரிந்து அந்தப் பகுதியில் இருப்பதால், பெற்றோரை இழந்து தவிக்கும் மழலைகளின் குரல் அங்கு எதிரொலிப்பதாகவும் கூறப்படுகிறது.
ஐ.எஸ் அமைப்பினருக்கும் ஈராக் இராணுவத்துக்கும் இடையில் இன்னமும் நகரின் சில இடங்களில் மோதல்கள் தொடர்கின்றன.(இ)

# அழிவின் பிடியில் வன விலங்குகள்



உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான வன விலங்குகள் அழிந்து வருகின்றன.தடுத்து நிறுத்த முடியாத ஒரு மாபெரும் அழிவு நடைபெற்று வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளனர்.
தி நஷனல் அக்கடமி ஒப் சயன்ஸ் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆய்வுச் செய்தியில்- “விலங்குகளின் தற்போதைய அழிவு ஒரு உலகளாவிய தொற்றுநோயாக உள்ளது. இதில் ஆறில் ஒரு பகுதியளவு அழிவு மனிதன் விலங்குகளின் வாழ்விடத்தை அழிப்பதால் ஏற்படுவதாகும். மற்ற ஐந்து பங்கு அழிவுகள் இயற்கை நிகழ்வு களால் ஏற்பட்டு வருகின்றன. கடந்த 100 ஆண்டுகளில் 200 இனங்கள் அழிந்துவிட்டன என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.கடந்த 2 மில்லியன் ஆண்டுகளில் சாதாரண அழிவு வீதம் பரிணாம மற்றும் பிற காரணிகளின் காரணமாக ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு 100 வருடங்களில் அழிந்து போகின்றன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இரோம் ஷர்மிளாவுக்கு டும்...டும்..டும்..!



மணிப்பூர் மாநிலத்தில் சிறப்பு ஆயுதப் படைச் சட்டத்தை எதிர்த்துப் போராடி வந்த இரோம் ஷர்மிளா, தனது தோழரை மணப்பதற்காக திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள சார் - பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார்.
மணிப்பூர் மாநில சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு தற்போது திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள அப்சர்வேட்டரி பகுதியில் வசித்துவரும் இரோம் ஷர்மிளா, தனது நீண்டநாள் தோழரான அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த டெஸ்மாண்ட் அன்ரனி ஹட்டின்ஹோவைத் திருமணம் செய்து கொள்வதற்காக கொடைக்கானல் சார் - பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார். புதன்கிழமையன்று காலை பத்து மணியளவில் டெஸ்மாண்டுடன் சார் - பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த இரோம் ஷர்மிளா, இதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தார். டெஸ்மாண்ட் வெளி நாட்டவர் என்பதால் 30 நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். இந்த 30 நாட்களுக்குள் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில், இருவரும் திருமணம் செய்துகொள்ள முடியும். (இ)

# அணு ஆயுதச் சோதனையால் வடகொரியாவில் நலநடுக்கம்?




வடகொரியாவின் கடலோரப் பகுதியில் நேற்று 5.8 ரிக்டர் அளவுக்குச் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
வடகொரியா தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் கூட ஏவுகணைச் சோதனை ஒன்றை மேற்கொண்டது. இதனால் உலக நாடுகளின் கண்டனத்தை பெற்றது. இந்த நிலையில் ஜப்பான் கடலில் இன்று 6.0 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின் அது 5.8 ரிக்டர் அளவு என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் சார்பில் அறிவிக்கப்பட்டது.
நிலநடுக்கம் கடலுக்கு உள்ளே 334.1 மைல் தூரத்தில் ஏற்பட்டதாகவும், ஆனால் அதன் மையப்பகுதி வடகொரிய நகரான சோங்ஜின் தென்கிழக்கில் 112 மைல் தூரத்தில் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிலநடுக்கம் ஏதோ அணுஆயுதச் சோதனையின் காரணமாகத் தான் ஏற்பட்டது என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (இ)

# அதிர்ஷ்டமோ அதிர்ஷ்டம்..!




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தை சேர்ந்த ரோசா டோமின்கியூ (வயது 19) என்ற யுவதி, இவர் கடந்த வாரம் அரிசோனா மாகாணத்தில் உள்ள ஒரு லொத்தர் கடையில் தனது அதிர்ஷ்டத்தை சோதித்து பார்க்க 5 டொலர் மதிப்புள்ளலொத்தர் சீட்டு ஒன்றை வாங்கினார். இதற்கான பரிசுத்தொகை 5 லட்சத்து 55 ஆயிரம் டொலர்.
அதன்பின்னர் 2 நாள் இடைவெளியில் கலிபோர்னியாவின் கேஸ் ஸ்டேஷன் பகுதியில் மீண்டும் ஒரு லொத்தர் சீட்டை வாங்கினார். இதனுடைய பரிசுத்தொகை 1 லட்சம் டொலர். இந்த நிலையில் அவர் வாங்கிய 2 லொத்தர் சீட்டுகளுக்கும் அவருக்கே பரிசு கிடைத்தது. இதன் மூலம் அவர் 6 லட்சத்து 55 ஆயிரம் டொலருக்கு சொந்தக்காரி ஆனார்.
ஒரே வாரத்தில் 2 லொத்தர் சீட்டுகளில் பரிசு பெற்றதன் மூலம் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கும் ரோசா டோமின்கியூ தனக்கு கிடைத்திருக்கும் பணத்தை கொண்டு தான் மிகவும் விரும்பும் கார் ஒன்றை வாங்க முடிவு செய்து உள்ளார். (இ)

# கின்னஸ் நாணயம் ஜேர்மனியில் கொள்ளை



ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் அரிய நாணயங்களைப் பாதுகாத்து வரும் அருங்காட்சியகத்தில் 100 கிலோ எடை கொண்ட சுத்த தங்கத்தாலான கனடா நாட்டு நாணயம் ஒன்று பாதுகாக்கப்பட்டு வந்தது. 2 ஆம் எலிசபெத் ராணியின் உருவம் பொறிக்கப்பட்ட இந்த நாணயம் தூய்மையான தரத்துக்காக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றிருந்தது.
மிகவும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டு இருந்த இந்த நாணயத்தை கடந்த மார்ச் மாதம் மர்மநபர்கள் சிலர் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். இந்தச் சம்பவம் ஜெர்மனியில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது.
இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவந்த பெர்லின் நகரப் பொலிஸார், அங்குள்ள நியூ கொய்லின் பகுதியில் அதிரடிச் சோதனை நடத்தினர். இதில் நாணயக் கொள்ளையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். எனினும் அந்த நாணயத்தை பொலிஸாரால் மீட்கமுடியவில்லை. அதைக் கொள்ளையர்கள் உருக்கியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)




# சாய்ந்தது சிகரம்

விம்பிள்டன் டென்னிஸ் காலிறுதியில் அதிர்ச்சித் தோல்வியடைந்த நடப்புச் சம்பியனும் முதல் நிலை வீரருமான அன்டி முர்ரே, தொடரிலிருந்து வெளியேறியதுடன், தனது முதல் இடத்தையும் பறிகொடுக்கும் அபாயத்தை எட்டியுள்ளார்.

அதேவேளை இரண்டாம் நிலை வீராங்கனையான சிமோனா ஹலெப்பையும் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

லண்டனில் நடந்து வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டம் ஒன்றில் ஜோஹன்னா கோன்டா 6:7, 7:6, 6:4 என்ற புள்ளிக்கணக்கில் உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் சிமோனா ஹலெப்பை (ருமேனியா) வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு காலிறுதியாட்டத்தில் உலகத் தரவரிசையில் 87வேது இடத்தில் உள்ள சுலோவக்கியா வீராங்கனை ரைபரிகோவா 6:3, 6:3 என்ற புள்ளிக்கணக்கில் 25ஆம் நிலை வீராங்கனையான கோகோ வன்டேவெஜ்க்கு (அமெரிக்கா) அதிர்ச்சியளித்து அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.

இதேவேளை, நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரும், நடப்புச் சம்பியனுமான அன்டி முர்ரே (இங்கிலாந்து), 24ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் சாம் குயரியிடம் வீழ்ந்தார். இந்த ஆட்டத்தில் சாம், குயரி 3:6, 6:4, 6:7, 6:1, 6:1 என்ற புள்ளிக் கணக்கில் அன்டி முர்ரேவுக்கு அதிர்ச்சியளித்தார்.

மற்றொரு காலிறுதியில் மரின் சிலிச் (குரோஷியா) ஜிலெஸ் முல்லர் (லக்சம்பர்க்) ஆகியோர் மல்லுக்கட்டினார்கள். மரின் சிலிச் 3:6, 7:6, 7:5, 5:7, 6:1 என்ற சுற்றுக் கணக்கில் ஜிலெஸ் முல்லரை சாய்த்து அரையிறுதிக்குள் நுழைந்தனர். (ஐ)



# அரையிறுதியில் அச்சுவேலி கலைமகள்

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு அச்சுவேலி கலைமகள் அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று இரவு நடைபெற்ற முதல் சுற்று ஆட்டங்களில், கைதடி வளர்மதி அணி 27:29, 25:17, 25:21 என்ற புள்ளிக்கணக்கில் மீசாலை சீமா அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா 13:25, 25:19, 25:23 என்ற புள்ளிக் கணக்கில் புத்தூர் சரஸ்வதி அணியை வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணி, 25:18, 26:24 என்ற புள்ளிக்கணக்கில் கைதடி வளர்மதியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை நடைபெற்ற காலிறுதியில் அச்சுவேலி கலைமகள் அணி 25:27, 25:17, 25:13 கெருடாவில் விவேகானந்தா அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)


# மெர்சலான நாசர் மகன்



விஜயின் 'மெர்சல்', ரசிகர்களுக்காக மிகவும் அற்புதமாகத் தயாராகி வருகிறது. படத்தின் மூன்றாவது 'பெஸ்ட் லுக்' எப்போது வரும் என ரசிகர்கள் ஆவலாக காத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் விஜயின் தீவிர ரசிகரான நடிகர் நாசரின் மகன் பைசல், தனது காரின் பின் பக்கமாக 'மெர்சல்' என எழுதியிருக்கிறார். இந்தத் தகவலை நாசரே தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# மைக்ரோசொப்டின் அதிர்ச்சி முடிவு




மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் 8.1 இயங்குதளம் கொண்டு இயங்கும் ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளுக்கான அப்டேட்டை அதிகாரபூர்வமாக நிறுத்திக் கொள்வதற்கு அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சுமார் 80 சதவிகிதம் விண்டோஸ் கைத்தொலைபேசிகளில் விண்டோஸ் இயங்குதளம் உள்ளது. இனி எவ்வித அப்டேட், செக்யூரிட்டி பேட்ச், பக்பிக்ஸ் போன்றவை இந்த கைத்தொலைபேசி இயங்குதளத்துக்கு வழங்கப்பட மாட்டாது.

இதனால் விண்டோஸ் கைத்தொலைபேசிகளுக்கான 8.1 அல்லது அதற்கும் பழைய இயங்குதளங்களைப் பயன்படுத்துவோர் தங்களது சொந்த விருப்பத்தில் தொடர்ந்து பயன்படுத்தலாம். (ஒ)

# பிக்பாஸ்: காதல் மயக்கத்தில் ஜூலி



விஜய் தொலைக்காட்சியின் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் தினந்தோறும் ஒரு பரபரப்பு நிகழ்ந்து வருகிறது. வந்தநாள் முதல் பல முறை சர்ச்சைகளில் சிக்கி வருபவர் ஜூலி.

நேற்றையதினம் அனைவரும் படையப்பா ரஜினி ஸ்டைலில் ஆடை அணிந்து ரஜனியின் ஸ்ரைலிலேயே இருக்க வேண்டும் என பிக்பாஸ் உத்தரவிட, ஜூலிக்கு ஆரவ் மீசை வரைந்தபோது அவரை கண்களை விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் ஜூலி.

பின்னர் ரஜினி பாட்டுக்கு நடனமாடி முடித்தவுடன், காயத்ரியை தனியாக அழைத்து வந்த ஜூலி, "ஆரவ்வைப் பார்த்தால் ஏதோ செய்யுது. பார்த்துக்கொண்டே இருக்க வேணும் போல தோனுது. எனக்கு அவரைப் பிடித்திருக்கு" என்றார்.

பின்னர் காயத்ரி இதை மற்றவர்களிடம் கூறி கலாய்த்தார். ஆரவ்வும் "ஜூலி ஆரம்பத்தில் கவலையாக இருந்ததால் ஆறுதல் கூறினேன். ஆனால் போகப் போக அவரின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்ததால் ஒதுங்கிக்கொண்டேன்" என்றார். (ஒ)

# அரச அதிபர் கரப்பந்தாட்டத் தொடர்: சம்பியனானது சங்கானை பிரதேச செயலகம்



அரச அதிபர் கரபந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சங்கானை பிரதேச செயலக அணி தனதாக்கிக்கொண்டது

நேற்றுமுன்தினம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இத் தொடரில் கோப்பாய், நெடுந்தீவு பிரதேச செயலகங்கள் தவிர, ஏனைய 13 பிரதேச செயலகங்களும் பங்கு பற்றியிருந்தன.

இதன் இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியும், யாழ் மாவட்ட செயலக அணியும் மோதின.

இதில், சங்கானை பிரதேச செயலக அணி திறமையாக விளையாடி 25:19, 25:22, 25:23 என்ற புள்ளிக் கணக்கில் யாழ். மாவட்ட செயலக அணியை வென்று சம்பியனாகியது.

கரப்பந்தாட்டத் தொடரில் ஐந்தாவது தடவையாக சங்கானை அணி சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ-6)

அபிவிருத்தி முன்னோடிகளாக

# அரச உத்தியோகத்தர்கள் மாறவேண்டும்

அனைத்து அரச ஊழியர்களும் அடுத்துவரும் ஆண்டுகளில் அபிவிருத்தியின் முன்னோடிகளாக செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி செயலக பணிக்குழுவினருடனான சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டியது அரச ஊழியர்களின் பொறுப்பாகும். அந்த அபிவிருத்தித் திட்டங்களை நெறிப்படுத்தும் நிலையம் ஜனாதிபதி செயலகமே ஆகும். அதன்போது உற்பத்தித் திறன் கூடிய நிறுவனமாக ஜனாதிபதி செயலகத்தை மாற்றும் நோக்குடன் ஜனாதிபதி இன்றைய இந்த சந்திப்பில் கலந்து கொண்டார். பதின்நான்கு லட்சம் அரச ஊழியர்களுக்கு முன்மாதிரியாக வினைத்திறனாக திட்டமிடப்பட்டவாறு ஜனாதிபதி செயலக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்தவத்தை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அத தெரண

# நெல்லியடியில் கண்காணிப்பு கமராக்கள்

நெல்லியடி நகரப்பகுதியை கண்காணிப்பதற்கு கமராக்கள் பொருத்தப்படவுள்ளதோடு நெல்லியடி நகரில் உள்ள பஸ் நிலையத்துக்கு இலத்திரனியல் கடிகாரமும் பொருத்தப்படவுள்ளது. நெல்லியடி வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்.மாவட்ட சிறிலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான சிவக்கொழுந்து அகிலதாஸ் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 15 இலட்சம் ரூபா நிதியை இதற்கென வழங்கியுள்ளார். இந்நிலையில் கண்காணிப்புக் கமராக்கள் மற்றும் கடிகாரம் பொருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாக நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்துள்ளார். (உ-11)

# எவ்-7 போர் விமானங்கள் புதுப்பித்து வழங்கியது சீனா



கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள விமானங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் அலகு, முதற்கட்டமாக சீனத் தயாரிப்பான இரண்டு எவ்-7 போர் விமானங்களை இலங்கை விமானப் படைக்குப் புதுப்பித்துக் கொடுத்துள்ளது. சீனாவின் எம்.எஸ். கைற் நிறுவனத்தின் விமான பொறியியல் பிரிவின் உதவியுடன், இலங்கை விமானப்படை கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் 2016ஆம் ஆண்டில், விமானங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் அலகு ஒன்றை ஆரம்பித்தது. இங்கு எம்.எஸ். கைற் நிறுவனத்தின் பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளே, தற்போது, விமானங்களைப் பழுது நீக்கி புதுப்பித்துக் கொடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் சீனத் தயாரிப்பாக, பி.ரி- 6 ரக பயிற்சி விமானங்கள் இங்கு புதுப்பிக்கப்பட்டு இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் சிறிலங்கா விமானப்படை அதிகாரிகள் மற்றும், சீன நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றிருந்தனர். (உ)

## ஆறு அம்ச கோரிக்கை

# நில அளவையாளர்கள் போராட்டம்



ஆறு கோரிக்கைகளை முன் வைத்து, அரச நில அளவையாளர் சங்கம் இன்று முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

அடையாள பணிப்புறக் கணிப்புக்கு அரசாங்கம் சரியான பதிலை வழங்காத தன் காரணமாக தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அரச நில அளவையாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த உடுகொட தெரிவித்தார். நேற்று பிற்பகல் காணி அமைச்சர் கயந்த கருணாதிலகவுடன் தமது பிரச்சினைகள் சம்பந்தமாக பேசிய போதிலும் தீர்வு கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

இது தொடர்பில் குறிப்பிட்ட காணி அமைச்சர் கயந்த கருணாதிலக, அரச நில அளவையாளர் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து நேற்று விரிவாகப் பேசியதாகவும் இதன்போது அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு பெற்றுக் கொள்வதற்கு உடன்பட்டதாகவும் கூறினார். இவ்வாறான நிலையில் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது நியாயமற்றது என்றும் அமைச்சர் கயந்த கருணாதிலக கூறினார். (உ)

# ரணிலுடன் சந்திப்பு

சைட்டம் பிரச்சினை சம்பந்தமாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று இரவு அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. சைட்டம் நிறுவனம் சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து இதன் போது விரிவாக பேசப்பட்டுள்ளது. தமது சங்கத்தினால் சைட்டம் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக கடந்த மார்ச் மாதம் முன் வைக்கப்பட்ட யோசனைகள் ஐந்தையும் செயற்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதன்போது உடன்பட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அநுருத்த பாதெனிய கூறினார். (எ)

# சட்டவிரோத குடியேறிகள்

## நாடு திரும்ப பொது மன்னிப்பு

தென் கொரியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கை தொழிலாளர்கள் தண்டனையின்றி நாடு திரும்புவதற்கானன பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொதுமன்னிப்புக் காலம் ஜூலை 10ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 19ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தென் கொரிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனைப் பயன்படுத்தி தென் கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர் நாடு திரும்ப வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள இலங்கைத் தொழிலாளர்களை கேட்டுள்ளார். இந்தக் காலப்பகுதியில் மீண்டும் நாடு திரும்பும் தொழிலாளிகளுக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாதென்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (உ)

# 60அடி பாலத்தருகே ரயில் விபத்து

## பெரும் அனர்த்தம் தவிர்ப்பு



கொழும்பிலிருந்து பதுளைக்கு சென்ற இரவு தபால் சேவை புகையிரதம் இன்று அதிகாலை 2.30 மணியளவில் கொட்டகலை புகையிரத நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த சம்பவத்தில் மூன்று பேர் காயங்களுக்குள்ளாகி கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக காலை முதல் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்விபத்தில் நான்கு புகையிரத பெட்டிகள் குடைசாய்ந்து பாரிய அளவில் சேதத்திற்குள்ளாகியுள்ளன. இவ் விபத்து கொட்டகலையில் அறுபது அடி உயர பாலத்திற்கு மிக அருகான பகுதியில் இடம் பெற்றிருக்கிறது. ஆயினும் பெரும் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. எனினும் பாலத்தின்மேல் உள்ள ரயில் தண்டவாளத்தில் பாரிய அளவிலான சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (உ)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com

## நாளை நாளும் கோளும்

14.07.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 30ஆம் நாள்

பஞ்சமி பி.ப. 12.39 வரை | பூரட்டாதி மு.இ. 10.52 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 10.30-12.00 | சுபநேரம் 06.00-07.30 | எமகண்டம் 03.00-04.30

வல்வெட்டித்துறை கப்பல் உடையவர் கோயில், சாவகச்சேரி ஸ்ரீதுர்க்காதேவி, உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்- கொடி

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அன்பு | விவேகம் | போட்டி | பொறுமை | நேர்மை | விருத்தி | அனுகூலம் | அசதி | ஆதரவு | ஆக்கம் | நன்மை | தொல்லை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1989 .07.13**

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# இராணுவ முகாமிலிருந்து ஆயுதங்கள் மாயம்

அநுராதபுரம், கலத்தேவ பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தின் கவசப் படைப்பிரிவிலுள்ள ஆயுதக் களஞ்சியசாலையிலிருந்து ஆயுதங்கள் சில மாயமாகியுள்ளன.

முகாமின் ஆயுதக் களஞ்சியசாலைக் கதவை உடைத்தே அங்கிருந்த இரு துப்பாக்கிகள் உள்ளிட்ட சில ஆயுதங்கள் களாவாடப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த முகாமின் கட்டளையதிகாரின் ஆணைப் பிரகாரம், முகாமைவிட்டு எந்தவொரு வீரரோ அல்லது அதிகாரியோ வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், துப்பாக்கித் தோட்டாக்கள் எவையும் காணாமற்போகவில்லை என்றும், கடந்த மாதம் 28ஆம் திகதியன்றே, குறித்த முகாமிலிருந்து இறுதியாக ஆயுதங்கள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## இலங்கைக்கு பாராட்டு

நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு மின் சக்தித் துறையை வலுப்படுத்தி முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் முடிந்துள்ளமை இலங்கைக்கு வெற்றியாகுமென்று சார்க் அமைப்பின்செயலாளர் நாயகம் எச்.எவ்.அம்ஜித் ஹூசைன் பி. சியால் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் மின்சக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் செயலாளர் நாயகம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சார்க் வலய நாடுகளுக்கு இடையே ராஜதந்திரித் தொடர்புகளை வலுப்படுத்துவது இந்தச் சந்திப்பின் நோக்கமாகும். நிலைபேறான எரிசக்தியை விரிவுபடுத்துவதற்கு சார்க் நாடுகளுக்கு இடையே நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எரிசக்தி நெருக்கடிக்குத் தீர்வாக இது அமையும் என்றும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். (உ)

## ஹெரோய்ன் போதைப் பொருள் யுவதி உட்பட நால்வர் கைது

ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் உள்ளிட்ட நான்கு பேர் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிரந்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ, கல்தமுல்ல பிரதேசத்தில் 64 கிராமும் 850 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் வைத்திருந்த 33 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் ரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

இதேவேளை 20 கிராமும் 240 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்னுடன் 24 வயதுடைய யுவதி ஒருவர் மோதரை, தொட்டலங்க விகாரை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தவிர மாளிகாவத்தை பிரதேசத்தில் வைத்து அதே பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவர் 15 கிராமும் 150 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மாளிகாவத்தை பிரதேசத்தில் வைத்து 02 கிராமும் 190 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருளுடன் 33 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## இதயம் கொடுத்தவர்களுக்கு வீடு கொடுத்தார் ஜனாதிபதி

இலங்கையின் முதலாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையை மேற்கொள்ள தமது மகனின் இருதயத்தை வழங்கிய பெற்றோருக்கு அவர்கள் தற்போது வசிக்கும் இடத்திலேயே வீடு ஒன்றை நிர்மாணித்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தத் தீர்மானத்தை தெரியப்படுத்துவதற்காக சத்திர சிகிச்சைக்கு மகனின் இருதயத்தை வழங்கிய தாய் மற்றும் தந்தை ஆகியோரை கண்டி வைத்தியசாலைக்கு இன்று அழைத்திருந்ததாக வைத்தியசாலையின் பணிப்பாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கண்டி உடநுவர ஹெக்டயார் கொலனியில் வசித்து வந்த 22 வயதான பிரதீப் குமார சம்பத் என்ற இளைஞன் விபத்தில் உயிரிழந்திருந்தார். அவரது இருதயமேபிறிதொருவருக்கு மாற்றப்பட்டிருந்தது. (உ)

## புகையிரத கடவையருகில் இளைஞன் சடலமாக மீட்பு

அனுராதபுரம் - யாழ்ப்பாணம் வீதியில் ஹத்தரெஸ்வெல புகையிரதக் கடவைக்கு அருகில் 25 வயதான இளைஞனின் சடலம் இன்று மீட்கப்பட்டதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கவரக்குளம் பிரதேசத்தை சேர்ந்த தனுஷ்க தனஞ்சய பண்டார என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது தலையின் நடுவில் காயம் இருப்பதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். இளைஞனை கொலை செய்து கொண்டு வந்து போட்டார்களா? அல்லது புகையிரதக்கடவைக்கு அருகில் விபத்தில் சிக்கி உயிரிழந்தாரா? என்ற சந்தேகம் இருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(உ)

## இலங்கை பணியாளர் சவூதியில் மரணம்

தொழில் நிமித்தம் சவூதி அரேபியா சென்ற இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

துறைநீலாவணை கிராமத்தைச் சேர்ந்த 38 வயதான அழகையா அருணகிரி என்பவரே உயிரிழந்துள்ளார். சவூதியில் பணியாற்றி வந்த இவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் கடந்த ஒருவார காலமாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த நபர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவரது சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக உயிரிழந்தவரின் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ)

### சிறிதரனின்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

கிளிநொச்சி மாவட்டத்தில் மலையக வம்சாவழி மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த தேர்தல்களில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இந்த மக்களின் அதிகளவான வாக்குகளையும் பெற்றவர். எனவே, இந்த நிலையில் அவர் மலையக சமூகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் சொற் பிரயோகங்களை மேற்கொண்டிருப்பது, நாடு முழுவது வாழும் மலையக மற்றும் இந்திய வம்சாவழி மக்களின் மனங்களைச் சிதறடித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் நேசிப்பதாக கூறும் அதே தமிழ்த்தேசியத்தை நாங்களும் நேசிக்கின்றோம், அதற்காக எண்ணற்ற உயிர்த்தியாகங்களைச் செய்திருக்கின்றோம். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக வடக்கு - கிழக்கில் மலையக மக்கள் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், இவர்கள் இன்றும் மாற்றான் தாய் மனப்பாங்குடன்தான் நடத்தப்படுகின்றமை மிகுந்த மனவேதனையளிக்கிறது. எனவே, மலையக மக்களைக் காயப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படும் மோசமான சொற்பிரயோகங்களை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுகின்றோம்" எனவும் குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### போதையால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை நேரத்தில், அசாதாரண முறையில் நடந்துகொண்ட மாணவர்கள் 42 பேரை அழைத்து, அப்பாடசாலையின் பிரதியதிபர், விசாரணைகளை மேற்கொண்ட போதே, அவர்கள், போதையூட்டும் ஏதோவொரு பொருளைப் பயன்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டது.

அதன் பின்னர், பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அந்த 41 பேரும், பொலிஸரினால் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். பொலிஸ் நிலையத்துக்கு, அழைத்துச் செல்லும்போது, தம்வசம் வைத்திருந்த ஒருவகையான சிறுசிறு பொதிகளை, மாணவர்கள் வீதியில் வீசியெறிந்துள்ளனர். அதனை எடுத்த பொலிஸார், அவற்றை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே, மாணவர்கள், போதைப்பொருளை பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (எ)

### புலிகளின்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மந்துவில் பகுதியில் இராணுவத்தினர் காட்சிப்படுத்தியுள்ளனர்.அதில் கடற்புலிகளின் படகுகளும் வைக்கப்பட்டிருந்தன. இங்கு வரும் தமிழ், சிங்கள் மக்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களும் புலிகளின் போரியல் தொழில் நுட்பங்களைக் கண்டு வியந்து வந்தனர்.

இந்த நிலையில் புதுமாத்தளன்,மந்துவிலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 'இசையரசி' என்னும் போர்ப்படகை இலங்கை இராணுவப் பொறியியல் பிரிவினர் நேற்றுப் பிற்பகல் முல்லைத்தீவு பிரதான வழியூடாக வேறிடத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இலங்கைக் கடற்படையினரின் போர்க்கலங்களை தாக்கி அழிப்பதற்கு கடற்புலிகள் மகளிர் அணியினர் இந்தக் போர்ப் படகைப் பயன்படுத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் போர்த்தளபாடங்களை எட்டு வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினர் காட்சிப் படுத்தி வந்தநிலையில் திடீரெனக் குறித்த படகு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டமை பல சந்தேகங்களை மக்களிடையே எழுப்பியுள்ளது. (அ)

### அரைகுறைத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் என்ன? முதலமைச்சருக்கு ஆதரவாக நின்றதால் சிவாஜிலிங்கத்தை சிறையில் அடைத்து முதலமைச்சரை தனிப்படுத்த முயற்சியா ? அல்லது தமிழ் மக்களுக்கு அவர்கள்கொடுக்க போகும் அரை குறை தீர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க கூடியவர்களை சிறையில் அடைத்து எதிர்ப்பு போராட்டத்தை முடக்க நினைக்கிறார்களா என சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-01)

### சந்திக்க மறுத்தார்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விஷேட பிரதிநிதி பென் எமர்ஷன், ஜூலை 10 தொடக்கம் 14ஆம் திகதி வரை இலங்கையில்விஷேட சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.

இந்நிலையில் வவுனியாவில் காணாமல் போனவர்களின் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகில் உள்ள வீதியின் மறுபுறத்தில் நேற்று வாகனத்தை நிறுத்தி சுமார் 15 நிமிடங்கள் வரை அவ்விடத்தில் நின்றனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் போன உறவுகள் அவரை சந்திக்க முயன்றுள்ளனர். எனினும், அவர்களைச் சந்திக்க தற்போது நேரம் இல்லை என கூறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விஷேட பிரதிநிதியின் மொழிபெயர்ப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

**சமையல்காரர் தேவை**



- நன்கு சமைக்கத் தெரிந்த சமையல்காரர் ஒருவர் (பெண்) அவசரமாகத் தேவை.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
0777 412 713 / 0773 200 727

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 13.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.